**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.**

Sessions Case No.43/2023

Deposition of witness – PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : கண்ணகி | Caste | : |
| W/o. | : சடையன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 01.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை;

நான் மல்லியகரையில் குடியிருந்து வருகிறேன். 1வது சாட்சி செந்தில்குமார் என்னுடைய மகன் ஆவார். 2வது சாட்சி பொன்மனச்செல்வன் என்னுடைய பேரன் ஆவார். ஆஜர் எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் அவரை தெரியும். சாட்சி புவனேஸ்வரி என்னுடைய பேத்தி ஆவார். அவர் தற்போது கர்ப்பமாக உள்ளதால் இன்று அவரால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை. வழக்கு

சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

சுமார் 2 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள், எங்கள் ஊரில் திருவிழா நடந்தது. அப்போது இரவு 10.00 மணி அளவில் என் வீட்டிற்கு முன்னால் இருந்தவர்கள் அவர்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டு என் மகன் செந்தில்குமார் மீது விழுந்துவிட்டார்கள். அதனால் என் மகனுக்கு காயம் ஏற்பட்டது. அதன் பிறகு என் மகனை சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் 6 மாதத்திற்கு முன்னர் மல்லியகரை சந்தைபேட்டை சார்ந்த அசோகன் மகன் செல்வகுமார் குடிபோதையில் எங்கள் வீட்டிற்கு முன்பு நின்று ஆபாசமாக பேசிக்கொண்டிருந்தார் என்றும், அதற்கு என் மகன், வீட்டிற்கு போடா என்று சொன்னார் என்றும், எதிரி கெட்டவார்த்தையால் என் மகனை திட்டினார் என்றும் அதனால் என் மகனுக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 17.8.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு ஆஜர் எதிரி ஆபாசமாக என் மகனை திட்டி, இன்னைக்கு வாடா பார்க்கலாம் என்று கூறினார் என்றும், அதற்கு என் மகன், வேனும்னே வம்பு சண்டைக்கு வர நீ

வீட்டுக்கு போடா என்று சொன்னார் என்றும், ஆஜர் எதிரி போடா நொண்டி பயலே என்று என் மகனை திட்டி கன்னத்தில் ஓங்கி அடித்து கீழே தள்ளி காலால் நெற்றியிலும் முதுகிலும் உதைத்தான் என்றும் கீழே கிடந்த கட்டையை எடுத்து இடது கண் புருவத்தில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், அதே கட்டையால் என் மகனின் பின்தலையில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும் என்னுடைய பேத்தி புவனேஸ்வரி அங்கு வந்தபோது அவரையும் ஆபாசமாக திட்டி தலை மயிரை பிடித்து இழுத்து கையால் கன்னத்தில் அடித்து அவரது நைட்டியை கிழித்துவிட்டார் என்றும் பின்னர் வீட்டுக்குள்ளே போய் டிவி, சேர் ஆகியவற்றை எடுத்து கீழே போட்டு உடைத்து சேதப்படுத்தினார் என்றும், அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து ஒழுங்கா போடா என்று திட்டினார்கள் என்றும் எதிரி தான் கையில் வைத்திருந்த கட்டையை காட்டி மிரட்டினார் என்றும் பின்னர் ஆம்புலன்சிசை வரவழைத்து என் மகனை ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும் என் மகன் சிகிச்சையில் இருந்தபோது அவரிடம் வாக்குமூலம் பெற்று போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் என் மகன் எதிரியுடன் சமாதானம் செய்துகொண்டார் எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.